ET/SSS/2022(2023)/OL/51/T/Q/S-2

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

G. C. E. Ordinary Level | අ. පො. ස. සාමාන්‍ය පෙළ | 2022 (2023)

# Student Seminar Series

## மாணவர் கருத்தரங்கு தொடர்

Practice Paper | முன்னோடி வினாப்பத்திரம்

# Drama & Theatre

# நாடகமும் அரங்கியலும்



**Question Paper - I, II** |வினாப்பத்திரம் - I, II (மொழிமூலம்–தமிழ்)

Nenasa

The National e-learning Portal for The General Education

தொலைக்கல்வி மேம்பாட்டு பிரிவு | கலைப்பிரிவு

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education, Sri Lanka

| 51 | T | I, II |
|---|---|---|

අ. පො. ස. සාමාන්‍ය පෙළ විභාගය - ශිෂ්‍ය සම්මන්ත්‍රණ මාලාව - 2022 (2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரப் பரீட்சை- மாணவர் கருத்தரங்கு தொடர் - 2022 (2023)
G. C. E. Ordinary Level Examination – Student Seminar Series - 2022 (2023)

නාට්‍ය හා රංගකලාව I, II
நாடகமும் அரங்கியலும் I, II
Drama & Theatre I, II

පැය තුනයි.
மூன்று மணித்தியாலம்
Three Hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි.
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time – 10 minutes

*வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.*

## நாடகமும் அரங்கியலும் I

கவனிக்க
- எல்லா வினாக்களுக்கும் விடையெழுதுக.
- 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க
- உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவிற்கும் உரிய வட்டங்களில் உமது விடைக்குரிய இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (x) இடுக.
- அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து அவற்றைப் பின்பற்றுக.

1. கேட்போரின் மனவெளி அரங்காகும் கலைவடிவம்
   1) தொலைக்காட்சி நாடகம்
   2) வானொலி நாடகம்
   3) மேடை நாடகம்
   4) தெருவெளி நாடகம்

2. கணப்பிரசன்னமான கலை வடிவத்தைக் கொண்ட தொகுதி
   1) நாடகம், கூத்து, பலே.
   2) நாடகம், சிற்பம், ஓவியம்.
   3) கட்டடம், ஓவியம், சிற்பம்.
   4) புகைப்படம், இசை, நடனம்.

3. கதைக்கும் நாடகத்திற்கும் இடையிலான பிரதான ஒற்றுமை
   1) வாசிக்கப்படுவது
   2) பாத்திரங்கள் காணப்படுவது
   3) கூட்டாக இரசிக்கப்படுவது
   4) படர்க்கை நிலையில் சொல்லப்படுவது

4. அரங்கு தொடர்பான பொருத்தமற்ற கூற்று
   1) ஆற்றுவோரும் பார்ப்போரும் சங்கமிப்பது
   2) திறந்த வெளிகளும் ஆற்றுகை வெளியாவது
   3) அரங்கவெளி ஆற்றுகையைத் தீர்மானிப்பது
   4) சமூகத்திலிருந்து புறவயமானதாக இருப்பது

5. மேல்வரும் கூற்றுக்களுள் உளப்பயிற்சி தொடர்பான தவறான கூற்று
   1) பாத்திரமேற்று நடிக்க உதவும்
   2) உள்ளத் தளர்வினை ஏற்படுத்தும்
   3) பாத்திர உணர்வினை வெளிப்படுத்தலை இலகுவாக்கும்
   4) புறம்சார் பயிற்சியாக வழங்கப்படும்

6. பார்வையாளரை சகிர்தயன் என அழைக்கும் நாடக மரபு
   1) கிரேக்கம்
   2) சமஸ்கிருதம்
   3) யப்பான்
   4) சீனா

7. ‘முன் மத்திய மேடையின் முற்பகுதியில் வீட்டு வாயிற் படிக்கட்டு போன்றதொரு காட்சிப்பொருள் வைக்கப்படலாம்’ எனும் கூற்று மேடைக்குறிப்பின் எந்த வகையினுள் அடங்கும்?
   1) ஒலிக் குறிப்பு
   2) இசைக் குறிப்பு
   3) நடிப்பிற்கான குறிப்பு
   4) காட்சியமைப்புக் குறிப்பு

8. A.B,C ஆகிய கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு கீழ்வரும் வினாவுக்கு விடையளிக்குக.

   A- நடிகரது உடல் எத்தகைய சித்திரிப்பிற்கும் தயாராக இருத்தல்

   B- வெவ்வேறு வீச்சுக்களில் சொல்லாடுதல்

   C- பாத்திர உணர்ச்சிக்குள் பிரவேசித்தல்

   கூற்றுக்கள் A,B,C குறித்து நிற்கும் சித்திரிப்புக்கள் முறையே

   1) குரல்வழி, உணர்ச்சி வழி, உடல்வழி.
   2) உணர்ச்சி வழி, குரல்வழி, உடல்வழி.
   3) உடல்வழி, குரல்வழி, உணர்ச்சி வழி.
   4) உடல்வழி, உணர்ச்சி வழி, குரல்வழி.

9. ‘சைக்ளோறாமா’ என அழைக்கப்படுவது
   1) வான் திரை
   2) காட்சித் திரை
   3) பக்கத் திரை
   4) முன் திரை

10. சடங்குகளுக்கான அரங்கவெளிகளில் பெருங்காட்சிக்கு உகந்தது
   1) பூசைக் களம்
   2) கோவில் வீதி
   3) யாகக் களம்
   4) தீக்குவியற் களம்

11. அரங்கில் பொருத்தமான அசைவுகளை சூழமைவுக்கு ஏற்ப வெளிப்படுத்துவது
   1) தொடர்பாடற் திறன்
   2) புதிதளித்தல் திறன்
   3) உளம் சார்ந்த திறன்
   4) செயலியக்கம் சார்ந்த திறன்

12. பாத்திரத் தெரிவு முறையில் ஒரு சம்பவச் சித்திரிப்பின்போது பல பாத்திரங்களைத் தெரிவுசெய்வதற்கு ஏதுவான தெரிவு முறை
   1) சல்லடைத் தெரிவு
   2) மூடிய தெரிவு
   3) திறந்த தெரிவு
   4) விசேட தெரிவு

13. ஒருவரின் சமூகப் பெறுமானம் பாத்திரச் சித்திரிப்பின்
   1) பௌதிகப் பண்பு ஆகும்
   2) குணவியற் பண்பு ஆகும்
   3) சமூகவியற் குணாம்சம் ஆகும்
   4) உளவியற் பண்பு ஆகும்

14. கவிஞர் முருகையனின் நாடகம் அல்லாதது
   1) பொய்க்கால்
   2) உயிர்த்த மனிதர் கூத்து
   3) நாமிருக்கும் நாடு நமது
   4) சக்தி பிறக்குது

15. மனிதமாடு எனும் சிறுகதையை எழுதியவர்
   1) அ.செ.முருகானந்தன்
   2) வ.அ.இராசரத்தினம்
   3) சண்முகநாதன்
   4) ஜெயகாந்தன்

16. காலத்தால் முதன்மைப்படுத்தப்படும் அரங்க நிறுவனம்
    1) லங்கா சுபோத விலாச சபை
    2) நாடக அரங்கக் கல்லூரி
    3) போய்ஸ் கம்பனி
    4) வசந்த கான சபா

17. “சப்பாத்தி முள்ளும் சரியாய் விளையாது ஏர் ஏறாது..” எனும் வரிகளைக் கொண்ட மஹாகவியின் கவிதையின் தலைப்பு
    1) தேரும் திங்களும்
    2) மீண்டும் தொடங்கும் மிடுக்கு
    3) பாடு சுமப்போர்
    4) வெறியாடல்

18. நாடக அரங்கக் கல்லூரி ஊடாக வெளியிடப்பட்ட அரங்க சஞ்சிகை
    1) அரங்கு
    2) ஆற்றுகை
    3) கூத்தரங்கம்
    4) தாயகம்

19. மானுடம் சுடரும் ஒரு விடுதலை என்பது
    1) மேடை நாடகம்
    2) தெருவெளி நாடகம்
    3) இசை நாடகம்
    4) விவாத அரங்கு

20. ஆரொடு நோகேன் நாடகத்தில் ‘மியூசிக்’ மற்றும் ‘கொமர்ஸ்’ படிக்க விரும்பும் பாத்திரங்கள் முறையே
    1) ஆரணி,ரஜீவ்
    2) அம்பிகை, ஆரணி
    3) ஷங்கரி,ஷீலா
    4) றஜீவ்,ஷீலா

21. ஆரொடு நோகேன் நாடக பாடத்தில் காலமாற்றத்திற்கேற்ப பிள்ளைகளின் மனப்பாங்கு மாற்றமடையும் என்பதை விளங்கிக்கொண்ட பாத்திரம்
    1) ரஜீவ்
    2) ரஞ்சித்குமார்
    3) ராஜ்குமார்
    4) இராஜதுரை

22. புதியதொரு வீடு நாடக ஆற்றுகை எத்தனையாம் ஆண்டில் முதலில் மேடையேற்றப்பட்து
    1) 1969
    2) 1971
    3) 1966
    4) 1992

23. கிறிஸ்தவர்களின் தவக்காலப் பகுதியில் நிகழ்த்தப்பெறும் சுதேச சமயச் சடங்காக அமைவது
    1) வனவாசம்
    2) குளுத்தி
    3) பாஸ்கா
    4) வேட்டைத்திருவிழா

24. பாண்டவர் வனவாசச் சடங்கு சிறப்பாக நிகழ்த்தப்பெறும் பிரதேசங்களைக் கொண்ட தொகுதி
    1) கல்முனை, கம்பஹா, கண்டி
    2) மன்னார், காலி, மாத்தறை
    3) திருகோணமலை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம்
    4) பாண்டிருப்பு, உடப்பு, மலையகம்

25. பின்வருவனவற்றுள் கோவலன் கூத்து தொடர்பான பொருத்தமற்ற கூற்று
    1) கண்ணகியம்மன் வழிபாட்டோடு தொடர்புடையது
    2) எளிமையான சிந்து வகைப் பாடல்களைப் பிரதானமாகக் கொண்டது
    3) முல்லைத்தீவுப் பிரதேசத்திற்குரிய தனித்துவமான கூத்தாகக் காணப்படுவது
    4) தனித்துவமான ஆடற்கோலத்தைக்கொண்ட வஞ்சிப்பத்தன் பாத்திரத்தைக் கொண்டது.

26. இசை நாடகத் துறையில் ஹார்மோனியம் வாசித்துப் புகழ்பெற்ற கலைஞர்கள்
    1) காதர் பச்சா, பிலீப்
    2) சிவபாதம், அருமை
    3) பிலீப், முருகையா
    4) சரவணமுத்து, சிவபாதம்

27. இசைநாடக மரபில் பபூன் பாத்திரச் சித்திரிப்பினால் அதிகம் புகழப்பட்டவர்
    1) செல்வரத்தினம்
    2) கிருஷ்ணாழ்வார்
    3) பொன்னாலைக் கிருஷ்ணர்
    4) தைரியநாதன்

28. தமிழ்நாட்டு இசை நாடக ஆளுமையினரைக் கொண்ட தொகுதி
    1) எம்.ஆர்.கோவிந்தசாமி, வேலு நாயக்கர், வி.என்.செல்வராஜ்
    2) ஏரம்பு சுப்பையா, எஸ்.கே.செல்லையாபிள்ளை, கே.எஸ்.ஜெயராஜா
    3) சங்கரதாஸ் சுவாமிகள், எஸ்.ஜி.கிட்டப்பா, வி.என்.செல்வராஜா
    4) எஸ்.ஜி.கிட்டப்பா, சங்கரதாஸ் சுவாமிகள், கே.பி.சுந்தராம்பாள்

29. ஒளியின் அடிப்படைப் பண்புகள் எவை
    1) பிரகாசம், மனநிலை, திசை
    2) வர்ணம், செறிவு, பிரகாசம்
    3) வர்ணம், இழைமானம், வீச்சு
    4) புறத்தெறிகை, செறிவு, ஒழுங்கு

30. ஒருவரது இயல்பான புறத்தோற்றத்தில் இருந்து இன்னுமொரு பாத்திரமாகப் பண்புமாற்றம் செய்யத்தக்கவகையில் மேற்கொள்ளப்படும் ஒப்பனையாவது
    1) பாத்திர ஒப்பனை
    2) நேர் ஒப்பனை
    3) மோடிமைப் பாங்கான ஒப்பனை
    4) விசேட விளைவுக்கான ஒப்பனை

31. ‘மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள்’ எனும் நூலை எழுதியவர்
    1) பேராசிரியர் சு.வித்தியானந்தன்
    2) பேராசிரியர் கா.சிவத்தம்பி
    3) காரை செ.சுந்தரம்பிள்ளை
    4) பேராசிரியர் சி.மௌனகுரு


32. கூத்தின் இறுதி ஒத்திகை எவ்வாறு அழைக்கப்படும்
    1) வெள்ளுடுப்பு ஒத்திகை
    2) இசை ஒத்திகை
    3) செயல் ஒத்திகை
    4) தொழினுட்ப ஒத்திகை

33. நாடக விமர்சனம் என்பது நாடகத்தின்
    1) நிறைகளைக் கூறுவது
    2) குறைகளைக் கூறுவது
    3) நிறைகளையும் குறைகளையும் சமாந்தரமாகக் கூறுவது
    4) குறை, நிறைகளை ஆராய்ந்து ஆக்கபூர்வமான கருத்துக்களைக் கூறுவது


34. நாடகமொன்றில் காட்சிகளையும் பொருட்களையும் ஒழுங்குபடுத்துபவர்
    1) மேடைமுகாமையாளர்
    2) தயாரிப்பாளர்
    3) நெறியாளர்
    4) நடிகர்

35. தயாரிப்பாளர் தனது பணிகளைத் திறம்பட மேற்கொள்வதற்கு அவருக்கு மிக அவசியமான திறன்களில் ஒன்று
    1) நாடகம் எழுதும் திறன்
    2) நிதி நிர்வாகத் திறன்
    3) நடிப்புத் திறன்
    4) நெறியாள்கைத் திறன்

36 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்கு மேல்வரும் படங்களை அடிப்படையாகக் கொண்டு விடையளிக்குக.




A



B



C



D



E

36. சிறுவர் நாடகவாக்கச் செயற்பாடுகளுடன் தொடர்புடையவர்கள்
    1) A,B,C 2) C,D,E 3) B,D,E 4) A,C,D

37. சமூக மாற்றத்திற்காக அரங்கு தொழிற்படவேண்டும் என்பதை வலியுறுத்துபவர்
    1) A 2) C 3) D 4) E

38. யாழ்ப்பாணப் பேச்சு மொழியை முதலில் தனது நாடகங்களில் கையாண்டவர்
    1) A 2) B 3) D 4) C

39. மரபுவழிக் கூத்துக்களுடன் தொடர்புபட்டவர்கள்
    1) A,B 2) B,C 3) C,D 4) D,A

40. ‘அரங்க ஆய்வு கூடம்’ எனும் அமைப்பினை நிறுவியவர்
    1) A
    2) B
    3) C
    4) D

*****

දුරස්ථ අධ්‍යාපන ප්‍රවර්ධන ශාඛාව ජාතික භාෂා සහ මානව ශාස්ත්‍ර ශාඛාව

| 51 | T | I, II |
|---|---|---|

අධ්‍යාපන අමාත්‍යාංශය
*கல்வி அமைச்சு*
**Ministry of Education, Sri Lanka**

අ. පො. ස. සාමාන්‍ය පෙළ විභාගය - ශිෂ්‍ය සම්මන්ත්‍රණ මාලාව - 2022 (2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை- மாணவர் கருத்தரங்கு தொடர் - 2022 (2023)
**G. C. E. Ordinary Level Examination – Student Seminar Series - 2022 (2023)**

| | |
|---|---|
| නාට්‍ය හා රංගකලාව | I, II |
| நாடகமும் அரங்கியலும் | I, II |
| Drama & Theatre | I, II |

## நாடகமும் அரங்கியலும் II

- **முதலாம் வினா** கட்டாயமானது.
- **முதலாம் வினாவுக்கும், ஏனையவற்றுள் நான்கு** வினாக்களுக்குமாக மொத்தம் **ஐந்து** வினாக்களுக்கு விடையெழுதுக

1) கீழ்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.

i) கட்புல செவிப்புலக் கலை ஒன்று தருக. (01 புள்ளி)
ii) வாசிப்பு அரங்கில் முதன்மைப்படுத்தப்படும் சித்திரிப்பு வகை எது? (01 புள்ளி)
iii) ‘‘தொன்று திகழ்ந்திடு’’எனும் பாடல் இடம்பெற்ற இசைநாடகத்தின் பெயர் யாது? (01 புள்ளி)
iv) ஆரொடு நோகேன் நாடகம் எழுதப்பட்ட ஆண்டு எது? (01 புள்ளி)
v) ஊமச் சித்திரிப்பில் பயன்படுத்தப்படாத அபிநயம் எது? (01 புள்ளி)
vi) மீனவரின் கரைவலை இழுத்தல் செயலோடு தொடர்புடைய பாடல் வகை எது? (01 புள்ளி)
vii) காத்தவராயன் கூத்து எத்தெய்வ வழபாட்டுடன் தொடர்புடையது? (01 புள்ளி)
viii) ஈழத்தின் பா நாடகாசிரியர் ஒருவரைக் குறிப்பிடுக. (01 புள்ளி)
ix) ஆரொடு நோகேன் நாடகத்தில் மூன்றாவது குடும்பத்தில் பயன்படுத்தப்படும் மேடைப்பொருள்கள் நான்கு தருக. (02 புள்ளிகள்)
x) சிறுகதைக்கும் நாடகத்திற்கும் இடையிலான ஒத்த இயல்புகள் இரண்டினைக் குறிப்பிடுக.

(02 புள்ளிகள்)

2)
i) ஆற்றுகையை வலுப்படுத்தும் அரங்கத் துணைக் கலைஞர்கள் மூவரைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)
ii) நாடக எழுத்துரு ஒன்றின் மேடைக்குறிப்பினுள் உள்ளடங்கியிருக்கும் விடயங்கள் நான்கு தருக. (04 புள்ளிகள்)
iii) நடிகனைப் பாத்திரமாகப் பண்பு மாற்றம் செய்வதில் வேட உடை, ஒப்பனை என்பன எத்தகைய பங்களிப்புச் செய்கின்றன? (05 புள்ளிகள்)

3)

i) அரங்க விளையாட்டு என்றால் என்ன? (03 புள்ளிகள்)

ii) அரங்க விளையாட்டுக்கள் மூலம் பெற்றுக்கொள்ளப்படும், நடிப்பிற்கு அவசியமான திறன்கள் நான்கினைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

iii) ''நடிகன் மேடையில் பாத்திரமாக வாழ்வதற்கு அரங்கப் பயிற்சிகள் உதவுகின்றன''இக்கூற்றினை உதாரணங்களுடன் விளக்குக. (05 புள்ளிகள்)

4)

i) ஆரொடு நோகேன் நாடகத்தில் நான்காவது காட்சியில் இடம்பெறும் 'கனவு' எனும் நாடகத்தில் நடிப்பவர்கள் யார்? (04 புள்ளிகள்)

ii) ஷங்கரி, அம்பிகை ஆகிய பாத்திரங்களுக்கிடையிலான மனநிலை வேறுபாடுகளைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

iii) ஆரொடு நோகேன் நாடகத்தில் பாடகர் குழுவின் பணிகளைக் குறிப்பிடுக? (04 புள்ளிகள்)

5)

i) இசை நாடகத்திற்கு வழங்கப்படும் மறுபெயர்கள் நான்கு தருக. (04 புள்ளிகள்)

ii) இசை நாடகத்தின் சிறப்பியல்புகள் நான்கினைக் குறிப்பிடுக? (04 புள்ளிகள்)

iii) ஈழத்துச் சங்கரதாஸ் எனப் புகழ் பெற்ற நாடக ஆளுமையின் பணி பற்றிச் சுருக்கமாக எழுதுக. (04 புள்ளிகள்)

6)

i) ஈழத்துத் தமிழ் நவீன நாடக வரலாற்றில் திருப்பு முனைகளுக்குக் காரணமான அரங்க ஆளுமையினர் மூவரின் பெயர் தருக? (03 புள்ளிகள்)

ii) ஈழத்துத் தமிழ் நவீன நாடக மரபில் திருப்பு முனைகளாக எடுத்துக்காட்டத்தக்க நாடகப் படைப்புக்கள் மூன்றைக் குறிப்பிடுக? (03 புள்ளிகள்)

iii) ஈழத்துத் தமிழ் நவீன நாடக வரலாற்றில் ஏற்படுத்தப்பட்ட பிரதான மாற்றங்களைச் சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்)

7) பின்வரும் தலைப்புக்களில் மூன்றினைத் தெரிவு செய்து சிறுகுறிப்பு எழுதுக.

i) றட்டயகும (04 புள்ளிகள்)

ii) வேட்டைத்திருவிழா (04 புள்ளிகள்)

iii) நெறியாளர் (04 புள்ளிகள்)

iv) வில்லுப்பாட்டு (04 புள்ளிகள்)

v) வசந்தன் கூத்து (04 புள்ளிகள்)

*****